691

# மும்மணி

MUMMANI 卐 मुम्मणि

மலர் 1 | 15உ செப்டம்பர் 1947 | இதழ் 3

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 SEP 1947
MADRAS

691.



...ம்மணி காரியாலயம்.
... தெரு சென்னை.1

விலை 3 அணா

# மும்மணி காப்பாளர்கள்

மஹாஸம்ரக்ஷகர்கள்

ஸ்வஸ்திஸ்ரீ லக்ஷ்மிஸேன பட்டாரக பட்டாசார்ய வர்ய ஸ்வாமியார் அவர்கள், மேல் சித்தாமூர்.

ஸம்ரக்ஷகர்கள்

A. சக்ரவர்த்தி நைனார் M. A.
புரொபஸர் மதராஸ்.
K. P. பொன்ரங்க நைனார்
தச்சூர்.
V. G. சம்பத்ராவ் நைனார்,
மேல் சித்தாமூர்
அழகப்ப நைனார், கரடிப்பாக்கம்
யசஸ்வதி அம்மாள், விழுக்கம்.

போஷகர்கள்

2-ஆம் இதழிற்குப் பிறகு
சேர்ந்தவர்கள்

ச. விருஷபதாஸ் ஜைன்,
எடையாலயம்.
ம. அப்பாவு நைனார், ஆலக்ராமம்
V. A. சின்னத்தம்பி நைனார் ,,
A. ஸ்ரீபதி நைனார் ,,
க. சுலோசனா அம்மாள் ,,
C. புஷ்பநாத நைனார் ,,
நாக. விமலநாத நைனார் ,,
பார்ஸ்வநாத உபாத்தியாயர் }
சிம்மசந்திர நைனார் ,, }
V. நேமிநாத நைனார், ,,
V. சாம்ராஜ்ய நைனார் ,,
தா. செல்லப்பட்டு நைனார்,
பெரமண்டூர்.
பார்ஸ்வநாத நைனார்,
உப்புவேலூர்.
சக்ரவர்த்தி நைனார், பேராவூர்.
வ. ஜெ. சனத்குமார நைனார் ,,
V. J. ஜம்புகுமார நைனார், ,,
T. A. அப்பாதுரை நைனார்,
தென்னாத்தூர்.
R. அஜிததாஸ் நைனார், V. M.
பெரும்புகை.
காங்கேய நைனார், அகலூர்.
தே. சின்னசாமி நைனார், ,,
D. A. அப்பாண்டைராஜ்
ஜைன், சக்ராவரம்.
S. கெம்பீர நைனார்
சேதராகுப்பம்.
ஸ்ரீதர நைனார், ஜெங்கம் பூண்டி

போஷகர் நிதிக்கு
வாக் களித்தவர்கள்

S. சோமப்ரப நைனார்,
கள்ள கொளத்தூர்.
பார்ஸ்வநாத நைனார்,
காப்பலூர்.
சந்திரநாத நைனார், ,,

நன் கொடையாளர்கள்

ஆலக்ராமம்

| | |
|---|---|
| A. விஜயபால நைனார் | 5 0 0 |
| A. வஜ்ரபாகு நைனார் | 5 0 0 |
| அ. லோ. சுகாவதி அம்மாள். | 5 0 0 |
| A. சந்திரநாத நைனார் | 3 0 0 |
| சிவதேவி அம்மாள். | 3 0 0 |
| அ. தம்பி நைனார் | [illegible] 0 0 |
| பேராவூர் | |
| V. பத்மராஜ் நைனார் | 3 0 0 |

---

இவ்விதழில்


| | பக்கம் |
|---|---|
| மூவர்ணக் கொடி | 1 |
| அருகர் வணக்கமும் ஸித்தர் வணக்கமும் | 2 |
| மதி | 6 |
| இயற்கை எழில் | 8 |
| தமிழ் நாட்டு ஜைனர்களுக்கு ஒரு விண்ணப்பம் | 9 |
| சிலப்பதிகாரத்தில் ஜைன மும்மணிகள் | 11 |
| வினா விடைகள் | 14 |
| தசலாக்ஷணிகம் | 16 |
| ஒருசில உண்மைகள் | 17 |
| பார்வதி | 19 |
| காதல் | 23 |
| கறிவேப்பிலை | |

வந்தே ஜினவரம்

# ஸ்ரீ மும்மணி ஸ்ரீ

மலர் 1 | செப்டம்பர் 15 உ 1947 | இதழ் 3

13 SEP 1947
MADRAS

## மூவர்ணக் கொடி

மூவர்ணக் கொடியின் நடுவில் கைராட்டினத்திற்குப் பதிலாக அமைக்கப்பட்ட *இருபத்து நான்கு ஆரைகளுள்ள ஒரு சக்ரம் வந்துளது. இந்தச் சக்ரம் அசோகரின் அரச சின்னமாகிய தர்ம சக்ரம் என்பர். அசோகர் தமது ஆட்சியை ஐக்கியமாக நடத்துதற்கு அறிகுறியாக வைத்திருந்த அடையாளம் இது. இந்த அடையாளத்தை இப்போது கொடுத்திருப்பதால் இந்தியாவில் இனி மக்கள் ஒற்றுமையாய் (ஜாதிப் பிரிவினையும் உயர்வு தாழ்வு என்பனவும் இன்றி) வாழ்தற்கு அறிகுறியாக அமைந்துளது.

அசோகரின் ஆட்சியில் அவருக்கு அரச சின்னமாக இருந்தது தர்மசக்ரம் தான். அவர் ஜைனமதத்தில் பிறந்து, அந்தத் தருமத்திலே வளர்ந்து, பின்னர் சிற்சில காரணங்களால் ஜைன தருமத்தை விட்டு பௌத்த தருமத்தினைத் தழுவினர். ஆயினும் அவர் மனத்தினிடையே ஊறியுள்ள தருமம் அவரை விட்டு நீங்காமல் இருந்ததற்கு அறிகுறியே அசோகரின் அடையாளமாக நின்றது. அது தான் இப்போது நம் எதிரில் தோன்றும் (தரும சக்ரமாகிய) மூவர்ணக்கொடியாம்.

"வாழ்க மூவர்ணக் கொடி"

"ஆட்சி செய்க அத் தருமசக்ரம்"

---

* சக்ரத்தின் இருபத்து நான்கு ஆரைகள், தீர்த்தங்கரர் இருபத்து நால்வரையும் ஞாபகத்தை உண்டுபண்ணுவனவாய் இருக்கின்றன.

திருக்குறளாசிரியர் இயற்றிய

# அருகர் வணக்கமும்

# ஸித்தர் வணக்கமும்

—×—

6. பொறி வாயிலைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார்.

7. தனக் குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லான்
மனக்கவலை மாற்றலரிது.

8. அற வாழி யந்தணன் றாள் சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தலரிது.

9. கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்.

(6) பதின்மூன்றாம் குணஸ்தான வர்த்தியாகிய அருக பகவானுக்குத் திரவிய இந்திரியம் (வெளியில் தோன்றும் கண், செவி முதலியன) மாத்திரம் இருக்கும். பாவேந்திரியம் (கண், செவி முதலியவற்றால் அறியும் தன்மை) இல்லை. அவ் வருகபகவானுக்குப் பரம ஔதாரிக சரீரம் உண்டு. அவ்வுடலில் கண், செவி முதலியன இயற்கையாக அமைந்துள்ளன. அவைகளினால் அவர் பார்ப்பதும், கேட்பதும், பேசுவதும் இல்லை. மன உதவியினால் அறிவதுமில்லை. அருக பகவான் அறவுரை ஆற்றும் போதும் மனம் வைத்து இங்கு ஆற்ற வேண்டும், இங்கு ஆற்றுதற்கில்லை யென்று எண்ணி அவர் ஆற்றுதலும் இல்லை. மேகம் தங்கிய இடத்து மழை பொழிதல் போல அவ்வருக பகவான் சென்ற விடமெல்லாம் அற வுரை ஆற்றுவார். வினைகளைக் கெடுத்து ஞான வொளியை அவர் பெற்றதனால் உலகின்கண் உள்ள பொருள்கள் அனைத்தையும் ஒவ் வொன்றாக அறியும் தன்மையின்றி ஒருங்கே ஒரே சமயத்தில் அறியும் தன்மை வாய்ந்துள்ளார். ஆகவின் முறையே (கிரமவர்த்தியாக) அறிவதும் (அதாவது ஒன்றை அறிந்தபின்னர் மற்றொன்றை அல்லது ஒரு பொருளின் ஒரு தன்மையை உணர்ந்த பின்னர் மற்றொரு

தன்மையினை உணர்வதும்) பொறிகளின் வாயிலாக அதாவது புலன்கள் மூலமாக அறிவதும் ஆகிய அறிவு அவர்க்குண்டாவதில்லை. ஞான வொளியில் எல்லாப்பொருள்களும் பிரதிபலிப்பதனல் புலன்கள் மூலமாக அறிதற்கு அவசியமில்லாமல் நின்று விடுகிறது. வீட்டினுள் இருப்பவன் தான் ஜன்னல் வழியாக, வெளியில் இருக்கும் பொருள்களைப்பார்க்க வேண்டும். வெட்ட வெளியில் நிற்பவனுக்குப் பொருள்களைப் பார்க்க ஜன்னல் அவசியம் இல்லாதது போலாம்.

பொறிகளின் வாயிலாக (புலன்கள் மூலமாக) உண்டாகும் இன்ப துன்பங்களுக்கு மூல காரணமாகியதும் உலக வாழ்க்கைக்குக் காரணமாகியதுமான மோஹநீயம் என்னும் வினை அவரிடத்தினின்றும் நீங்கியுள்ளதனல் அவருக்கு ஐம்பொறிகளின் வாயிலினுல் (ஐம்புலன்களினுல்) உண்டாகும் இன்பம், துன்பம் ஆகியவை உண்டாதல் இல்லை. அவருக்கு ஆத்மானந்தமே உண்டாகின்றது. அருகபகவானுக்குப் பொறிகள் மட்டும் உள. புலன்களின் தோற்றம் இல்லையாகலின் புலன்களை அவித்தான் என்னும் பொருள்பட பொறிவாயில் ஐந்து அவித்தான் என்று குறளாசிரியர் கூறியுள்ளார். பொறிகளுக்குத் துணையாய் இருப்பவை புலன்கள். புலன்கள் வேலை செய்யாவிடில் பொறிகள் மாத்திரம் சித்திரப்பாவையில் பொறித்த பொறிகள் போல் இருக்கும். இதனல் "பொறிவாயி லைந்தவித்தான்" என்றதும் அருகபகவானுக்குப் பொருத்தமானதாகும்.

குறளாசிரியர் கருத்துக் கேற்ப ஜைனுசிரியர்களும் பொறிவாயிலைந்தவித்தான் என்று அருகபகவானைப் போற்றியிருத்தலைக் காண்க.

"பொறிவாயிலைந்தவித்த புனிதன் நீயே"

(ஜீவசம்போதனை)

"ஐவரை வென்றான் அடியிணை யல்லது
கைவரைக் காணினும் காணு வென்கண்"

(சிலப்பதிகாரம்)

"பொறியிலா வறிவனீ பூசனைக் கிறைவனீ"

(மேருமந்தரம்)

"பொறியைம்புலத்தின் வேட்கை நோய் தீர்க்கு
மருந்தென் றருந்தவர்கள் போற்றும் பதத்தன்"

(திருக்கலம்பகம்)

(7) உலகில் ஒன்றையொத்த மற்றொரு பொருள் இருப்பின் அதை அதனுக்கு உவமையாகக் கூறுதல் இயல்பு. ஒன்றை யொத்த மற்றொரு பொருள் இல்லை யாயின் "ராம ராவண யோர் யுத்தம் ராம ராவண யோ"ரிவ, "ககனம் ககனேபமம்" என்பது போல, அதனையே அத னுக் குவமையாகக் கூறுவது மரபு. அருகபகவானுடைய குணங்களைக் கூறுமிடத்து 'உவமாதீதன்' என்றும் அவருக்கு வழங்கப்பட்டுளது. ஆகலின் குறளாசிரியர் 'தனக்குவமை யில்லாதான்' என்று கூறியதும் அருக பகவானுக்குப் பொருத்தமாயுள்ள பெயராக அமையும்.

"ஒரு தனி விளங்கிய வுத்தமா போற்றி"

(திருப்பாமாலை)

என்று ஜைனாசிரியர்போற்றிய தொடரையும்நோக்குக.

(8) அருகபகவான் அறவுரையாற்றுதற்கு ஓரிடத்தை விட்டு மற்றோரிடம் செல்லும் போது தரும சக்ரம் அவர் முன் சென்றுகொண்டிருக்கும். சக்ரத்தைப் பெற்றவ னுக்குச் சக்ரவர்த்தி யென்று பெயராதல் போல, தரும சக்ரத்தைப் பெற்ற அருகபகவானுக்கும் தரும சக்ராதி பதி (அறவாழி யந்தணன்)என்ற பெயராயிற்று. அதனை விளக்கக் குறளாசிரியர் "அறவாழி யந்தணன்" என்ற நாமத்தை அருகபகவானுக்குக் கூறியுள்ளார் எனக் கொள்க.

"தரும சக்கிரத் தலைவனை"

"அறவாழி நாதா வரியாசனத்தா"

(திருப்பாமாலை)

என ஜைனாசிரியர் கூறியிருத்தலையும் நோக்குக.

(9) ஞானாவரணம் முதலிய எட்டுக் கர்மங்களும் கெடுத லால் கடையிலா அறிவு முதலான எண்குணங்கள் ஆகின்றன. தவம், தியானம் முதலியவற்றால் மனம்,வாக்கு, காயம் என்னும் மூன்று யோகங்களையும் தடுத்து, ஐம்புலன்களையும் வென்று, ஆத்ம வொளியைப் பெறுத லால் வினைகள் நீங்க குணங்கள் தோன்றும் இயல் புடையன. அக்குணங்கள் புதியனவாகத் தோன்றின வையல்ல. மேகத்தில் மறைக்கப்பட்ட சூர்யனுடைய ஒளி

மங்கிக்கிடத்தல் போல வினைகளினால் மறைக்கப்பட்டு மங்கிக் கிடந்தவை வினைகள் நிங்கியவுடன் அக்குணங்கள் புலனாகின்றனவே அன்றி நூதனமாக உண்டானவையல்ல. ஆகவின் இவை ஆத்மாவினது இயற்கைக் குணங்களே யன்றி சேர்க்கைக் குணங்கள் அல்ல. அல்லது புண்ய மஹிமையால் உண்டானவையும் அல்ல. புண்ய மஹிமையினால் உண்டானவை எட்டு ருத்திகளாகும். இவற்றையே எட்டு சித்திகளென்றும் கூறுவர். இவைகள் சாதாரண குணங்களாம்; அசாதாரண குணங்கள் அல்ல. இவை தேவதைகளுக்கும், சக்ரவர்த்திகளுக்கும் உண்டாவன. சில ருத்திப் பெற்ற யதிகளுக்கும் உண்டாவன. ஆகவின் இவைகள் பகவானுக்குப் பொருத்தமானவை யாகா. வினைகளை வென்று குணங்களைப் பெற்ற அருக பகவானைக் குறித்தற்கே குறளாசிரியர் "எண் குணத்தான்" என்ற சொற்களைக் கூறியுள்ளார். இதற்கேற்ப ஜைனாசிரியர்கள் கூறியிருத்தலையுங் காண்க.

"பண்ணவன் எண்குணன் பாத்தில் பழம் பொருள்"

(சிலப்பதிகாரம்)

"இறைவனீ ஈசனீ எண் குணத் தலைவனீ"

(மேருமந்திரம்)

"இருநால் வினை கெடுத்திட் டெண் குணனுமெய்தி"

(சீவ சம் போதனை)

எட்டுக் கர்மங்களையும் கெடுத்து எண்குணங்களையும் பெற்றவர் ஸித்த பரமேஷ்டி யாவர். ஆயினும் முன்னர்த் தோன்றக் கூடியவற்றை இப்போதே கூறலாம் என்ற "பாவிநைகமாபேக்ஷை"யினால் அருகபகவானையும் எண் குணத்தலைவன் என்று கூறியுள்ளார். ஆயின் இக் குறளில் ஸித்தபரமேட்டியையும் வணங்கியதாதல் காண்க.

(10) உலகில் இறப்பும் பிறப்புமே துக்க மெனப் படும். அப்பெற்றிய பிறவித்துக்கத்திற்குக் காரணமாகிய மோஹநீய மென்னும் வினையை (குற்றத்தை) நீக்கிய இறைவனது திருவடியைச் சேர்ந்தார்க்குப் பிறவிப் பெருங் கடல் சுழற்சியினால் உண்டாகும் துக்கங்கள் அணுகா என்பது கருத்து.

7-ஆம் பக்கம் பார்க்க

இருண்டவானிடையே, புகை மண்டலங்களான கருமேகங்களைத் தொளைத்துக்கொண்டு அமுதக்கிரணங்களை வீசித் தோன்றுகின்ற 'மதி' வட்டத் தீயோ?

சுடரொளி இரவியெனும் பகலவன் மறுபிறப்பு எடுத்தானோ? அன்றி— பாருலகை அணைத்துள்ள பெருஞ் சமூத்திரத்தில் தோன்றிய வெண் முத்தோ?

உண்மைக் காதலர்கள் கருத்தொருமித்து கூடி இன்புறும் வெள்ளித் தீவோ?

இந்த மாயா வையகத்தையே பிரதி பிம்பிக்கச் செய்யும் ஒளிபெறும் கண்ணாடியோ? அன்றி— அம்புலி யெனும் வெண்மலரின் இதயவர்ண ஜாலமோ?

நச்சைப் போன்ற பச்சை பசுந்தரையில் பளிச் செனமின்னி இச்சைதரும் நவரத்தினமோ?

வான மெனும் தாமரைக் குளந்தன்னிலே தன்னுடலை யொளித்து எழில் முகத்தை வெளியிற்காட்டி புன்னகையீந்து நீந்து கின்ற ஒளி மங்கையோ? அன்றி— சாந்தி நிலவும் இரவு எனும் கிரீடத்தினில் பதித்து ஒளி வீசுகின்ற தண் மணியோ?

உறக்க முண்டாக்கி உள்ளத்தினுக்கும் உணர்வினுக்கும் உள் ஒளியில் கனவுலகை சிருஷ்டிக்கும் உதயமோ?

மாயப் பிரபஞ்சத்தைவிட்டு மறைந்த மானிட உள்ளங்களெல்லாம் ஒன்று சேர்ந்து களித்துக் கூத்தாடும் பந்தோ?

சிந்தனை என்னும் பூனை பதுங்கி ருசித்த பொங்கி வழியும் பாற்குடமோ? அன்றி— புதுமையுடன் மிளிரும் மலர்ந்த 'ஆம்பல்' எனும் மாணவி நர்த்தனமிட்டு கலை வளர்க்க படித்திடும் புத்தகமோ?

கீதோபதேசம் செய்த மாயவன் கண்ணன் தன் மழலைப் பருவந்தன்னில் ஆகாயத்தை மோதிட தன் செழுங் கரங்களால் வீசிய வெண்ணெயோ?

மலர் வேதனாகிய சிருஷ்டிக் கலையின் பிதாவான நான்முகன் தன் தொழில்முடித்துக் கொண்டு தன்னுடைய வழிப்பசியை விண்ணமுதோடு தமிழ்க்கலையையும் சேர்த்து புசிக் கின்றானோ?

பாரினிலே மக்கள் மகிழ்ந்து மங்களமுடன் பூசிடும் அழகு மிகு சந்தனக் கிண்ணமோ?

மலர் அம்பு வீசி இதயத்துத்திகழ் இளங் காதலர் களை இன்ப மூட்டும் அனங்கன் தாம்பூலம் தரும் வைரத் தட்டோ?

ககனமதில் 'கலை' எனும் ஆரணங்கு திரும்பி படுக் கும் போது அதன் மேலாடை சற்றே விலக அலை மோதும் சாகரம் சிறிக்க— அவனியோர் அதிசயிக்க— பாவையின் பருவச் சின்னமாகிய கனமான தனங்களி லொன்று குலுங்க மின்னுகின்றதோ?

இவ்வுலக மாந்தர்க்குக் கூறும் "மதி' அந்த "பரமன்" முடி கண்டு இடம் பெற்றதோ?

கவியுள்ளம் மலர்ந்து, கனிந்து, கசிந்து, பண்ணேறி, விண்ணுயர்ந்து கீதம் பாடி உலவி வரும் வண்டினமோ?

ஓங்கிய சிந்தையால் இருள் கீறி, அருள் சுறந்து, ஒளி பரப்பும் குண சவுந்திரியோ?

மல்லிகையும் ரோஜாவும் அவள் ஞானப் பாலை அருந்திக் கள் வெறிக்கொண்டு கண் சிமிட்டி 'கலைப்பித் தனுடன்' குலுங்கசிறிக்கும் விந்தையே விந்தை? ஆஹா என்னே அற்புதக்கலை?

---

(5-ஆம் பக்கம் தொடர்ச்சி)

அருக பகவான் பிறவிப் பெருங்கடலி லிருந்து நீந்தி னவராகலின், அவரது அடியை அடைந்தவர் பிறவிப் பெருங்கடலை நீந்துவர் என்று குறளாசிரியர் கூறியுள் ளார். இதற்கேற்ப ஜைனசிரியர்கள் கூறியவற்றை யும் நோக்குக.

" பிறவி மாக்கடல் பெயர்க்கு மாற்றலா
விறைவ னன்னவ னேந்து கொள்கையான் "

(மேருமந்தரம்)

" பிறவிப் பெருங்கடலை நீந்திய பெய்வளையாய் "

(திருவெம்பாவை)

# இயற்கையெழில்

மாலை நேரம் :: கீர்த்தி

1. மாலைநேரமென்று சொல்லிடிலோ—நல்ல
மகிழ்வுமனதில் பிறந்திடுமே
சோலையில் கூவும் குயில்களெல்லாம்—நம்மை
சொக்கிட செய்திடுமவ்வேளை

2. மஞ்சள் வெய்யிலென்று சொல்லுமடா—இம்
மானிலம் துன்பத்தை வெல்லுமடா
சஞ்சலமெல்லாம் பறக்குமடா—நல்ல
சாந்திமனதில் பிறக்குமடா

3. விர்ரெனஓடும் நதிகளடா—அங்கு
வீசிடுமொய்யாரத் தென்றலடா
கர்வங்கொண்ட தீயமாந்தரைப்போல் - ஆற்றங்
கரையால் தடுக்குறும் குப்பையடா

4. தங்கமயமாக வான மெல்லாம்—இந்த
தரணியெங்குமொளி வீசுமடா
எங்கணுமானந்தம் பொங்குமடா—நல்ல
இன்பமுலகினில் தங்குமடா

5. ஆரமுதாம் கவிவாணர்களின்—கவி
ஆறுபெருகிடு மந்நேரம்
வீரம்பெருகிடு மந்நேரம்—தேக
வலிமை பிறந்திடு மந்நேரம்

6. பச்சைப் பசேலென்ற புற்களுமே—பொற்
பதுமைபோன்ற பலகற்களுமே
இச்சை இயற்கைமேல் ஊட்டுமடா—நல்ல
இன்பவழியினைக் காட்டுமடா

7. இயற்கை தேவி என்றும் வாழ்ந்திடவே—தீய
இன்னலென்னும் பேயும் வீழ்ந்திடவே
வயப்படுத்திடுந் தென்றலன்றி—மஞ்சள்
வெய்யிலும் வாழ்ந்திட வேண்டுமடா.

# தமிழ் நாட்டு ஜைனர்களுக்கு – – – – – ஒரு விண்ணப்பம்

தருமதத்தன்.

சுமார் 200 ஆண்டுகளாக ஆங்கிலேயர்கள் நம் இந்திய நாட்டை துப்பாக்கி முனையில் அடக்கி ஆண்டு வந்தார்கள்.

இந்திய 40 கோடி மக்களின் சார்பாக இந்திய தேசிய காங்கிரஸ் மஹாசபையினர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் போர் புரிந்து சொல்லொணு துன்பங்களுக் காளாயினர்.

இந்திய தேசிய காங்கிரஸ் மஹாசபையின் உண்மை நோக்கையும், உறுதியான கட்டுப் பாட்டையும், அஹிம்ஸா மூலம் போர்புரியும் திறனையும் கண்டு, இனி இந்தியர்களை அடக்கியாள முடியாதென்று உணர்ந்த ஆங்கிலேயர்கள் 15 8 47ல் இந்திய அரசாங்கத்தை இந்தியரிடமே ஒப்படைத்து விட்டனர்.

வீரர்களுக்கெல்லாம் வீரரான பண்டித ஜவாஹர்லால் நேருஜி அவர்கள் இந்தியாவின் முதன் மந்திரிஸ்தானத்தை வகித்து வருகிறார்.

இவ்வாறு உலகமே அதிசயிக்கத்தக்க முறையில் ஆங்கிலேயர்கள் அதிகார மாற்றம் செய்ததற்கு காரணம் யாரென்று யோசிப்போமானல் "எல்லா விடத்தும் கொலைதீது" என்ற அஹிம்ஸா தர்மத்தையே பிரதானமாகக் கொண்ட ஜைனர்கள் நிறைந்துள்ள குஜராத் மாகாணத்திலே ஜைனர்களுக்கிடையே பிறந்து, வளர்ந்து ஜைன முனிவர்களிடம் கல்வி பயின்று உலகம் உய்வதற்கு ஹேதுவாகிய அஹிம்ஸா தர்மத்தைப் பயின்ற, உலகம் போற்றும் உத்தமர் மகான் காம்சந்த்மோகனதாஸ் காந்தியே யாவர்.

உலகத்தில் விருப்பும் வெறுப்புமற்ற பெரியார்கள் போற்றக் கூடியது ஜைன தர்மத்தில் கண்டுள்ள அஹிம்ஸா தர்மமேயாகும். அத்தருமத்தை உறுதியுடன் கடை பிடிப்போருக்கு எக்காலத்திலும் தோல்வியே கிடையா தென்பதைக் கணக்கற்ற பீரங்கிகளையும், அணுகுண்டுகளையும் உடைய ஆங்கிலேயர்களிடை உறுதி கொண்ட அஹிம்ஸா போர் முறையினல் மனமாறுதல் ஏற்படச்செய்து ஆட்சியை இந்தியர்கைக்கு ஒப்படைக்கும்படி செய்ததின் மூலம் மஹாத்மா காந்தி உலகமக்களுக்கு நிரூபித்து விட்டார்.

ஆனல், அஹிம்சையையே முதன்மையாகக் கொண்ட ஜைன மதத்தைப் பின் பற்றுபவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் ஜைனர்களாகிய நாம் நம் தேசத்தில் எத்துறையிலும் முன்னணி

யில் நிற்கின்றோமில்லை. காரணம், நமக்குள் ஒற்றுமையும் உணர்ச்சியும் இன்மையே யாகும்.

உலக மக்களனைவரும் ஏகமனதாய் போற்றக்கூடிய தர்மங்களை உடையவர்களாகவும், உலகமே அதிசயிக்க வெற்றியை யளித்ததுமான அஹிம்ஸையே "தாரகமந்திரமென"க் கொண்ட நம்மவர்கள் இன்னும் விழித்தெழாததன் காரணம் யாதோ? இது யாவரும் வருந்தக்கூடிய விஷயமாகும்.

ஜைனர்களாகிய நாம் நமது தர்மத்தில் கூறியமுறைகளை உறுதியுடனும், நம்பிக்கையுடனும் பின் பற்றாததினாலும் சமய நெறிச்குப் புறம்பான விஷயங்களில் துணிவுடன் செல்வதினாலும், சுய மரியாதையை விட்டு சுயநலவாதிகளாகவும், பரோபகாரத்தை நினையாது கடினசித்தராக பழகிவிட்டதாலும் தற்கால உலகத்தில் மிக மிகப் பிற்போக்காளர்களாக இருந்து வருகின்றோம்.

உதாரணமாக நமது சமயநெறிகளில் பஞ்சமகா விரதங்களுள் ஒன்றாகிய பரிமிதபரிகிரகம் என்ற அரிய நுண்பொருளை ஆராய்வதில்லை. ஒவ்வொரு மனிதனும் தன்தேவைக்குமேல் குவித்து வைத்தல் நியாய விரோதமெனக் கருதப்படும அபேதவாதமெனும் அரிய கொள்கையாகும்.

இதை நாம் நன்கு தெரிந்திருந்தும், தெரியாமை போல், பலதீய வழியில் ஈடுபட்டு தேவைக்கு அதிகமான பொருளைத் தேட முனைந்துள்ளோம். இனி வரும் அரசியலில் இத்தகைய கொள்கையே நாட்டில் பரவப்போகிறது. காங்கிரஸ் அபேதவாதக் கொள்கையில் நம்பிக்கைக் கொண்டு அவர்களால் சிருஷ்டிக்கப் படப்போகும் புது உலக புதுமையை உலகமே கண்டு அதிசயிக்கப் போகிறது.

ஆகவே ஜைன மதத்தின் உண்மைத் தத்துவங்களை உணர்ந்து நாமும், நம்மக்களும் உயர்ந்த நிலையை அடைய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய உன்னத தர்மத்திலேயே அரசியல் கலந்துள்ளது. ஆகவே அரசியலுக்கும் மதத்திற்கும் சம்மந்த முள்ளதை யறிந்து மத முன்னேற்றத்தையும் அரசியல் முன்னேற்றத்தையும் பெற வழியுண்டு. தற்கால முறைப்படி உலக அரசியலிலும், மத ஒழுக்கத்திலும் முன்னேற்றமடைய வேண்டின் அடியில் கண்டதும், எல்லோராலும் ஒத்துக்கொள்ளக் கூடியதும், நேர்மையாளதுமான முறைகளை பின்பற்றி நம்மதத்தின் உன்னதமான கோட்பாடுகளையும், திருக்குறள் போன்ற நூலின் கண் கண்டுள்ள அரிசிய லமைப்பையும் மக்களுக்கிடையே ஒழுக பழகிக் கொள்ள வேண்டியது நம்மவர்களின் கடமையன்றோ!

# சிலப்பதிகாரத்தில் :: :: :: :: :: ஜைன மும்மணிகள்.

'உயிர் உறவோன்.'

ஓர் நாள் நள்ளிரவு கடைச்சாமத் துவக்கம். கோவலனும் கண்ணகியும் தங்கள் இல்லத்தை விட்டு வெளியேறுகின்றனர். ஊழ்வினைப்பயன் உந்துகிறது! கடை கழிந்தறியாக் காரிகையைப் பல காவதம் நடத்திச் செல்லத் துணிந்துவிட்டான் கோவலன். மதுரை அண்மையிலா யிருக்கிறது! ஆறைங்காதம் செல்லல் வேண்டும். பாவம்! கண்ணகி தன் கணவன் புறப்படலாம் என்றவுடன் புறப்பட்டு விட்டாள். பல ஆண்டுகள் மாதவியின் மயக்கத்தால் தன்னைப் பிரிந்திருந்தவர், மறந்திருந்தவர் என்பதையும் எண்ணவில்லை! புன் முறுவலுடன் கணவனைத் தொடர்ந்தாள்! பொழுது புலர்வதற்குள் காவிரிப்பூம் பட்டினத்தை விட்டுப் பல மைல்கள் செல்லவேண்டுமென்பது அவர்கள் திட்டம்! ஆகவே வேகமாக நடக்கின்றனர். வீதிகளில் அருகர் கோயில், புத்தர் கோயில், திருமால் கோயில் முதலியவை காணப்படுகின்றன. தங்கள் அவசரமான பிரயாணத்திட்டத்தையும் மறந்து அருகர் கோயிலை அணுகுகின்றனர்.

"புலவூண்டுறந்து பொய்யா விரதத்
தவல நீத்தறிந்தடக்கிய கொள்கை
மெய்வகை புணர்ந்த விழுமியோர் குழீஇய
வைவகை நின்ற வருகத் தானத்துச்
சந்தியைந்தும் தம்முடன் கூடி
வந்து தலைமயங்கிய வான்பெரு மன்றத்துப்
பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழல்
நீரணி விழவினு நெடுந்தேர் விழவினுஞ்
சாரணர் வருஉந் தகுதி யுண்டாமென
உலகநோன்பிகள் ஒருங்குடனிட்ட
வில கொளி சிலாதலந் தொழுதுவலங்கொண்டு"

சென்றனர். திருமால் கோயில், புத்தர் கோயில்களைத் தங்களுக்கு வலப்பக்கமாக விட்டுச்சென்றனர். ஊர்வாயில் கடந்தனர், காவிரியாற்றின் கடைமுகத்தினின்றும் ஒரு காவதம் வந்து சேர்ந்தனர். ஓர் சோலையை அணுகினர். அங்கே தவவேடம் தலைக்கொண்டுள்ள கவுந்தியடிகளைக் கண்டு இருவரும் அடிதொழுகின்றனர். அடிகள் (ஆரியாங்கனை) இருவரையும் உற்று நோக்கினர். அவர்கள் தோற்றத்தால் உயர்குடி மக்கள் என்பதையும், தன்னைப் பக்தியுடன் பணிந்தமுறைமையால் அவர்கள் சிராவகர்களென்பதையும், எவ்விதபாதுகாப்புமின்றி இருவரும் தனித்து வந்துள்ளமையால் ஏதோ நிலைதவறி வந்துள்ளன ரென்பதையும் அறிந்து கொண்டார். அடிகளுக்கு இரக்கங் குடிகொண்டது.

த்வத்தின் இயல்பு அது தானே! மாதவத் தாட்டியார் அவர்களோடு உருக்கத்துடன் உரையாடுகின்றார்.

“ உருவுங்குலனும் உயர்பே ரொழுக்கமும்
*பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்
உடையீர் என்னே உறுகணு ளரிற்
கடைகழிந் திங்ஙனம் கருதியவாறு ”

என்றனர்.

*(அருகதேவன் அருளிச் செய்த திருமொழியினின்றும் தவறாது ஒழுகும் நீவிர் என தம்பதிகளின் சமய நெறியையும் குறிப்பிடுகின்றார்.) அடிகளின் அருள்மொழியைச் செவியேற்ற கோவலன் தனது துக்க நிலையை வெளிப்படுத்தாமல் தவத்தலைவீர்! அடியேன் பொருள் தேடும் வேட்கையோடு மதுரை மாநகரம் செல்கின்றேன் என்றான். இதனைக்கேட்ட கவுந்தியடிகள் காடிடையிட்ட அவ்வழியில் உள்ள பரற்கற்களினால் கண்ணகியின் பாடகச் சீரடி எங்ஙனம் பொருந்துமென வருந்துகின்றார். மதுரைக்குச் செல்லப் பல நாட்களாகக் காலம் நோக்கியிருந்த அடிகள், கண்ணகிக்கும் துணையாகட்டும் என எண்ணி

“ மறவுரை நீத்த மாசறு கேள்வியர்
அறவுரை கேட்டாங்கு அறிவனை யேத்தத்
தென்தமிழ் நன்னாட்டு தீது தீர்மதுரை ”

க்கு யானும் வருகின்றேன் என்றார்.

மூவரும் புறப்படுகின்றனர். மொழிப் பொருள் தெய்வம் வழித்துணையாகெனக் கூறி நடக்கின்றனர். மொழிப்பொருள் தெய்வம் என்பது பஞ்ச நமஸ்கார மந்திரம். அருகர், ஸித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள் ஆகிய ஐவரையும் தியானித்துப் பிரயாணத்தைத் தொடங்கினர். கவுந்தியடிகள் தோமறுக்கடிகையும், சுவன் மேலறுவையும், கைப்பீலியுங் கொண்டு செல்லுகின்றனர். மாதவத் தாட்டியார் வழிகளிலுள்ள பல வளங்களையும் சிறப்புக்களையும் வருணிக்கின்றார். நாம் போகும் வழிகளில் பல காடுகளையும், மலைகளையும், வயல்களையும் கடந்து செல்ல வேண்டும். அவ்விடங்களில் அச்சத்தை யுண்டாக்கும் பல விலங்கினங்களின் குரலோசை நமது காரிகையைக் கலங்கவுஞ் செய்யும். ஆகவே ஆங்காங்கு அவளைப் பாதுகாத்துச் செல்லல் வேண்டும். காடுகள் பூராவும் கரும்புகளே மிகுந்திருக்கக் காண்பீர்கள்.

‘ கரும்பில் தொடுத்த பெருந்தேன் சிதைந்து
சுரும்புசூழ் பொய்கைத் தூநீர்கலக்கும்
அடங்கா வேட்கையி னறிவனுரெய்திக்
குடங்கையி னொண்டு கொள்ளவுங் கூடும்.

நமது தரிசனத்தில் தேனுண்ணல் கடியப் பட்டுள்ளமையால் அத்தகைய பொய்கைகளில் நீர் அருந்தலாகாது. அடங்கா வேட்கையினுல் இவள் அந்நீரின் தன்மையறியாது குடங்கையால் முகந்து பருகவுங் கூடும். ஆகவே அவ்விடத்தும் பாதுகாக்க வேண்டும். மேலும்

"குறுநரிட்ட குவளையம் போதொடு
பொறிவரி வண்டினம் பொருந்திய கிடக்கை
நெறிசெல் வருத்தத்து நீரஞரெய்தி
யறியா தடியாங் கிடுதலுங் கூடும்
எறி நீரடைகரை யியக்கந் தன்னில்
பொறி மாணலவனும் நந்தும் போற்ருது
ஊழடி யொதுக்கத்து உறு நோய்காணில்
தாழ்தரு துன்பந் தாங்கவும் ஒண்ணு"

வயல்களில் களை பறிப்பார் குவளைப் பூவுடனே அதனுள் தேனுண்டு களித் திருந்த வண் டினங்களையும் சேர்த்து வரமபிலெறிந்திருப்பர். நாம் அதனை உணராது நமது வழிசெல்வருத்தத்தால் அப்பூக் களின் மேல் அடிவைத்து நடக்க அவாவுவோம். அதனுல் பூக்களி னுள்ள வண்டுகள் இறந்துபடும். மேலும் வாய்க்காலில் நடந்து செல்லலாமென்ருல் அந்நீரில் குதித்தாடும் நந்தும் அலவனும் நமது பாதங்களினுல் மிதியுண்டு இறந்துபடும். அக் கொலைப்பாதகம் நம்மால் தாங்கவும் ஒண்ணுது. ஆகவே இவ்விடங்களில் கவனமாக நடந்து செல்ல வேண்டும் என ஆசில்கொள்கைஅறவி ஆங்காங்கு சமய ஒழுக்கங்களை வற்புறுத்திக்கொண்டு செல்லுகின்ருர். மூவ ரும் இடை யிடையே தங்கித் தங்கிச் சென்று ஒரு நாள் திருவரங் கத்தை அடைகின்றனர். ஆங் கொரு சோலையில் அமைந்திருக் கும் சிலாதலத்தில் சாரணர் வருகின்றனர். மூவரும் சாரணர் களைத் தொழுது அறங்கேட்டனர். பின்னர் அருகனை வாழ்த்து கின்றனர்.

அறிவ னறவோ னறிவுவரம் பிகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
தரும முதல்வன் தலைவன் தருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்
சினவரன் தேவன் சிவகதி நாயகன்
பரமன் குணவதன் பரத்தி லொளியோன்
தத்துவன் சாதுவன் சாரணன் காரணன்
சித்தன் பெரியவன் செம்மல் திகழொளி
யிறைவன் குரவ னியல்குண னெங்கோன்
குறைவில் புகழோன் குணப்பெருங் கோமான்
சங்கரன் ஈசன் சயம்பு சதுமுகன்
அங்கம் பயந்தோ னருக னருண்முனி

15-ஆம் பக்கம் பார்க்க

**29. எண் குணங்கள் யாவை ?**

கடையிலா அறிவு (அனந்த ஜ்ஞானம்)
கடையிலா காட்சி (அனந்த தரிசனம்)
கடையிலா வீரியம் (அனந்த வீரியம்)
கடையிலா இன்பம் (அனந்த சுகம்)
வேதநீயமின்மை (அவ்யாபாதத்வம்)
ஆயுஷ்யமின்மை (அவகாஹநத்வம்)
நாமமின்மை (ஸூக்ஷ்மத்வம்)
கோத்ரமின்மை (அகுருலகுத்வம்)

**30. கடையிலா அறிவு என்பது எது ?**

ஐம்புலன்களின் உதவியின்றித்தானே உலகின்கண் உள்ள பொருள்களையும், அவற்றின் மாறுதல்களையும் முற்றும் ஒருங்கே ஒரே சமயத்தில் அறியும் அறிவு.

இவ்வறிவுக்குத் தோன்ருத பொருள்கள் இவ்வுலகின்கண் இல்லை.

"அறிவினல் அறியாத அறிவன்" என்றதும் இவ்வறிவையே கூறப்பட்டதாகும்.

(ஐம்பொறிகளின் உணர்ச்சியினுல் உண்டாவதும் அறிவெனப்படும். அவ்வறிவின் மூலமாக மற்றைய பொருள்களை அறிவதும் உண்டு. அப்படி அறியுந் தன்மை ஜீவாத்மாவாகிய நம்மை யொத்தவர் கட்கே இருக்கிறது. பரமாத்மாவுக்கு ஐம்பொறிகளின் உணர்ச்சியாகிற அறிவினுல் அறியாமல் தானே அறியும் அறிவு உண்டு)

"அறிவு வரம்பு இகந்தோன்" என்றதும் இவ்வறிவையே கூறவந்த சொல்லாகும்.

விளக்கின் ஒளிமேல் மூடி இல்லாமல் இருப்பின், அவ்வொளி எவ்வளவு தூரம்வரை செல்லுமோ அவ்வளவு தூரம் வரையில் உள்ள பொருள்கள் அனைத்தும் அவ்வொளியினுல் ஒளிரும்.

அவ்விளக்கையே மூடி வைப்பின் அவ்வொளி அதனுள்ளே அடங்கி யிருக்கும். அதுபோன்று ஞானத்தின்

(அறிவின்) மேல் மூடியிருக்கும் ஞானவரணம் என்கிற வினை முற்றும் விலகியவுடன், அந்த ஞானவொளி லோகம் அலோகம் அனைத்திலும் பிரகாசிக்கின்றது. ஆகலின் அங்குள்ள பொருள்கள் அனைத்தும் அவ்வொளியில் பிரதி பலிக்கின்றன. இதனையே வரம்பு இல்லாத அறிவு எனக் கூறியுள்ளது.

மூடியினுள் அடங்கியஒளியைப்போல்ஜீவர்த்மாவாகிய நம்மவர்களுடைய அறிவு ஞானவரணம் என்னும் வினையி னல் மூடப்பட்டுளது. அம்மூடி விலகிய அளவில்பொருள் களை அறியலாகும். உதாரணமாக ஒரு எலக்டிரிக் விளக்கை எடுத்துக் கொள்ளுவோம், ஒரு துணியைப்பல மடிப்புகளாக அவ்விளக்கின்மீது மூடினல் அவ்விளக்கின் ஒளி அதனுள்ளே அடங்கி யிருக்கும். வெளியில் அவ் வொளி ஒளிராது. அப்பல மடிப்புகளை ஒவ்வொன்ருக எடுக்க, அவ்வொளி வெளியில் அதிகரித்துக் கொண்டே வரும். அம் மடிப்புகள் எல்லாவற்றையும் எடுத்தவுடன் அதன் ஒளி முழுதும் ஒளிரும். இத்தகைத்தே ஞானமும் (அறிவும்) ஆகும்.

---

(12-ம் பக்கம் தொடர்ச்சி)

பண்ணவ னெண்குணன் பாத்தில் பழம்பொருள்
விண்ணவன் வேத முதல்வன் விளங்கொளி
ஓதிய வேதத் தொளியுறி னல்லது
போதார் பிறவிப் பொதியறை யோரெனச்
சாரணர் வாய்மொழி கேட்டுத் தவமுதற்
காவுந்தி கைதன் கைதலை மேற்கொண்
டொருமுன் றவித்தோ னேதிய ஞானத்
திருமொழிக் கல்லதென் செவியகந் திறவா
காமனை வென்ருே னாயிரத் தெட்டு
நாம மல்லது நவிலா தென்னு
ஐவரை வென்ருே னடியிணை யல்லது
கைவரைக் காணினுங் காணு வென்கண்
அருளறம் பூண்டோன் றிருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தா
தருக னறவ னறிவோற் கல்லதெ
னிருகையுங் கூடி யொருவழிக் குவியா
மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லதென்
றலைமிசை யுச்சி தானணிப் பொருஅ
திறுதியி லின்பத் திறைமொழிக் கல்லது
மறுதா வோதியென் மனம்புடை பெயராது.

# தசலாக்ஷணிகம்

'தசலாக்ஷணிகம்' என்பது பத்து லக்ஷணங்களையுடைய தாகும். லக்ஷணம், தருமம், குணம், தன்மை ஆகியவை ஒரு பொருளையே குறிப்பன.—பத்துத் தருமங்களைக் குறித்து செய்யப் படும் விரதத்திற்குத் 'தசலாக்ஷணிக விரதம்' என்று பெயர். உத்தமக்ஷமை (பொறுமை) உத்தம மார்த்தவம் (மென்மை) உத்தம ஆர்ஜவம் (நேர்மை) உத்தம சௌசம் (செம்மை) உத்தம சத்யம் (உண்மை) உத்தம சம்யமம் (அடக்கம்) உத்தமத் தவம் (தவம்) உத்தமத்யாகம் (கொடை) உத்தம ஆகிஞ் சின்யம் (ஒன்றின்மை) உத்தம பிரமசரியம் என்னும் இந்தப் பத்துத் தருமங்களுள் தினம் ஒவ்வொரு தருமத்தைக் குறித்து உபவாஸம் முதலியவற்றைச் செய்வதுண்டு. அவ்வப் பெயரைக் கூறி அர்ச்சனை, ஜபம் முதலியவற்றையும் செய்தல் வழக்கு. இந் தப் பத்து நாட்களையும் புனித நாட்களாக எண்ணி சாஸ்திரங் கேட்டல், தானம் செய்தல் முதலிய நற் காரியங்களையும் செய்வது முக்கிய கடமையாயுளது. இப்பத்துத் தருமங்களும் ஆத்மா வின் இயற்கை குணங்களாக அமைந்தனவே. இவைகள் அவசியம் ஒவ்வொருவரிடத்திலும் இருத்தற் பாலன. இல் வாழ்க்கையில் ஈடுபட்டு ஆன்மஞானத்தையே மறந்து இருப்பவர்கள் இப் பெற் றிய குணங்களைப்பெற இயலாதவர்களாய் இருத்தலின், அவர் களும் இப்பத்துக் குணங்களைப் பெறுதற்காக இவ்விரதநாட்கள் ஏற்பட்டுள. இப்புனிதநாட்களில் ஒவ்வொருவரும் தம் ஆன் மாவைப் புனிதமாகச் செய்து கொள்ளுதற்கு அவசியம் முற் படுதல் வேண்டும். இப்பத்துத் தருமங்களை எப்போதும் எக் காலத்திலும் அனுசரிக்கலாம். ஆயினும் ஒவ்வொரு காரியத்திற் கும் ஒவ்வொரு காலம் தகுதியுள்ளதுபோல இவ்விரதங்களை அனுசரிப்பதற்கும் உரியகாலம் உண்டு. இவ்வருஷம் புரட்டாசி மாதம் 3 ந் தேதி முதல் 13-ந் தேதி வரையில் நடக்கும். அச் சமயத்தில் எல்லோரும் எல்லா இடங்களிலும் இவ்விரதங்களை அனுசரிப்பார்கள் என்று தெரிவிக்கின்றோம். இந்தத் 'தசலா க்ஷணிகவிரதம்' வடநாட்டில் எல்லா இடங்களிலும் நடைபெறு கின்றது. நம் நாட்டில் மதராவில் மாத்திரம் தான் நடைபெறு கின்றது. நம் நாட்டிலும் எல்லா இடங்களிலும் இந்தத் 'தசலாக்ஷி ணிக விரத'த்தைச் சிறப்பாக நடத்த வேண்டும். இவ்விரத நாட்களை அனுசரித்து சென்னையில் ஸ்ரீ சந்த்ரப்ரப தேவாலயத் தில் புரட்டாசி மாதம் 12-ந் தேதி (28-9-47) யன்று உத்ஸவம் நடைபெறும்.

# ஒரு சில உண்மைகள்

S. P. கேம்பீர நைனார்

---

நான் இப்போது உங்கட்கு ஒரு சில உண்மைகளை உரைக்கப்போகிறேன். அவற்றை உரைப்பதற்கு முன்னே, ஓரே ஒரு பொய்யையும் சொல்லி வைக்கிறேன். நீங்களும் ஒருவாறு கேட்டு வையுங்கள்

அன்றைக்கு ஒரு நாள். அனல்கொளுத்தும் கோடைக் காலம். தலை தெறிக்கும் வெயில். அப்பாவி ஆறுமுகம் ஒரு பையன். அப்படி இப்படி அசையாமல் அமர்ந்திருக்கிறான். அவ் வெயிலிலே வியர்த்து வடிகிறது அவன் உடல். வியர்வையாய்ச் சொட்டுகிறது அவன் முகம். அதை அறிந்து கொள்ளவேயில்லை அவ்வறிவில்லாதவன். அவன் பாட்டில் அமர்ந்திருக்கிறான் ஆறுமுகம். இப்படியே இருக்கிறான் இடித்த புளி மாதிரி என்றால் அது மிகையாகாது.

அச்சமயம் அவன் தாய் வருகிறாள் அங்கே. அப்பாவி ஆறுமுகம் தன்தாயுக்கு ஓரே ஒரு பிள்ளை. செல்வக் குடும்பத்தில் பிறந்தவன். அத்தகைய அவன் அத்தாயினால் செல்வமாக வளர்க்கப்படுகிறான். அல்லது, சிறப்பாகப் போற்றப்படுகிறான் என்று நான் உங்களுக்குச் சொல்லவும் வேண்டுமா?

வந்த அவள் தன் மைந்தனைக் காண்கிறாள். புத்திர வாஞ்சை அவளைப் பிடர்பிடித்துத் தள்ளுகிறது. ஓடி நெருங்குகிறாள் அவனை. அவன் இருகன்னங்களையும் தன்னிரு கைகளாலும் தடவுகிறாள். கையை முறிக்கிறாள். கண்ணேறு கழிக்கிறாள்.

ஏண்டா! கண்ணு! உனக்கு வியர்த்துக் கொட்றதே. ஐயோ பாவம்! வியர்வையாய் வடிகிறதே. என் இவ் வெயிலில் இருக்கிறாய்? வந்துவிடு இங்கே! என்று நிழலுக்கு அழைத்து வருகிறாள். அப்பொழுதுதான் தனக்கு வியர்த்துக் கொட்டுகிறது என்பதை அறிந்து கொள்ளுகிறான்; நம் ஆறுமுகம். உடனே தன் தாயைப் பார்க்கிறான். அம்மா! எனக்கு உண்மையில் வியர்த்துத்தான் கொட்டுகிறது. அடடா! இது வரையில் அதை அறியாமல் அன்றோ இருந்து விட்டேன். ஐயையோ! அதற்கு என்ன செய்ய வேண்டும் இப்பொழுது? என்று பதை பதைத்துக் கேட்கிறான்.

அத்தகைய அவனுடைய அறியாமையை அறிகிறாள் அன்பு கனிந்த அத்தாய். கோபங் கோபமாக வந்து விடுகிறது அவளுக்கும். உடனே அவள் அவனைப்பார்க்கிறாள்.

என்ன செய்ய வேண்டும். உன்னைக் கட்டையிலே வைக்க வேண்டும் முதலிலே. என் கையை கழுவி விடவேண்டும் இரண்டாவதாக, தெரிகிறதோ, இல்லையோ? உன்னைக்கொண்டு போய் விட! கொளுத்தி எரியவிட! என்றெல்லாம் சபித்துக் கொட்டுகிறாள் சாபம் சாபமாக. வேறு என்னதான் செய்வாள் அவள்.

பின்னர் சிந்திக்கிறாள். பெற்றமனம் பற்றி எரிகிறது அவளுக்கு. "ஐயோ பாவம்! நாம்பெற்ற குழந்தையை நாமே பெரிதும் சபித்திட்டோமே" என்று ஏங்குகிறாள் மறுபடியும் அன்பு பெருகுகிறது அவளிடம். தன் புத்திரனை அழைத்து குளித்து விட்டு வரும்படி ஏவுகிறாள். அவனும் செல்லுகிறான். குளித்து விட்டு வருகிறான். தன் அறியாமையை அறிகிறான். தன்னைத் தானே திருத்திக்கொள்ள முற்படுகிறான் அதுபோலவே நாமும் சில தவறுகளைச் செய்து கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் அவை நமக்குத்தவறுகளாகத் தெரிவதில்லை. நம் அறிவு என் கின்றதாய் வந்து நம்மை அதட்டித்திருத்தி விடுவாள். அதன் பிறகே அத்தவறுகள் நமக்கும் தவறுகளாகத் தோன்றத்தொடங் கும். நாமும் அவற்றை நீக்கிச் சரியானவற்றைச் செய்து கொள் வோம். இதை ஒரு உதாரணத்தால் உணர்வோம்.

சென்னையிலுள்ள தன் தந்தைக்குச் செங்கற்பட்டிலுள்ள சேஷாசலம் ஒரு கடிதம் எழுதுகிறான். எழுதப்புகும் அவன், உயர் திரு தகப்பனர் அவர்கள் திவ்யசமுகத்திற்கு, யானாகிய தங்கள் குமாரன் சேஷாசலம் அனந்தகோடி நமஸ்காரஞ் செய்து எழுதிக் கொண்ட கடிதம் என்னவென்றால் இவ்விடம் யாவரும் க்ஷேமம், அவ்விட முள்ள அனைவர் க்ஷேமங்களையும் அடிக்கடி தெரிவிக்கக் கோருகிறேன் என்று எழுதி விடுகிறான். அக்கடிதத்தை நாம் பார்க்கும்போது எல்லாம் தவறு என்று படுகிறது. முதலாவது உயர்திரு தகப்பனர்என்றபோதே எழுதியிருக்கும் தான் குமாரன் என்று அர்த்தம் வந்து விடுகிறதே திரும்பவும் "யானாகிய குமாரன்" என்று ஏன் அவன் எழுதவேண்டும்?

இரண்டாவது நமஸ்காரம் செய்யப் புகுந்தவன் அநந்தகோடி நமஸ்காரமும் அப்படியே செய்ய வேண்டுமா? ஒன்றிரண்டு கூட்டிச் செய்யக்கூடாதா? அல்லது குறைத்துச் செய்யக் கூடா தா பிய்க்காமல் பிளக்காமல் அனந்தகோடி நமஸ்காரமும் அப் படியே செய்யத்தான் வேண்டுமா? அப்படிச் செய்யாவிட்டால் அவன் வயிற்றுக்கு ஆகாமல் போய்விடுமா? அல்லது உடம்புக்கு ஏத்துக்கொள்ளாமல், கோளாறு எதையாவது கொண்டு வந்து வைத்துவிடுமா? என்பன போன்ற ஐயங்கள் தோன்றுகின்றன.

மூன்றாவதாக நம் சேஷாசலம் எழுதிய கடிதம் அவன் தகப்ப னிடம் போய்ச் சேர்ந்து விடுகிறது. தபாற்காரனிடமிருந்து வாங்கும் போதே அதை அத்தகப்பனர் கடிதம் என்று தெரிந்து கொள்ளுகிறார். பிறகு வெள்ளைக் கடிதத்தில் கருமையான எழுத்துக்கள் அவர் கண்ணுக்கு நன்கு புலப்படத்தான் செய் கின்றன. உடனே அவர் அது எழுதிய கடிதம் என்பதையும் அறிந்துதான் கொள்ளுகிறார் அப்படி அவரே அறிந்து கொள்ளக்

23-ஆம் பக்கம் பார்க்க.

# பார்வதி

ரா. சு. சுப்பையர்

அஸ்தமனச் சூரியன் தன் அழகுக்காட்சிகளை யெல்லாம் உலகுக்குக் காட்டி விட்டு. கடமையைப் பூர்ணமாகச் செய்து முடித்து விட்டு, களைப் பாறச்செல்லும்தொண்டனைப் போல், ஓய்வுபெற மேலைக் கடலுக்குள் மறைந்தான். பார்வதி இடுப்பில் குடத்துடன் வெகு வேகமாக ஆற்றை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள்.

ஆற்று நீரை குடத்தில் நிரப்பிக்கொண்டு அவள் திரும்பி பாதிதூரம் வருவதற்குள் நன்றாக இருட்டி விட்டது. குடத்தைக்கொண்டுபோய் வீட்டில் வைத்து விட்டு அவள் இன்று ஓர் பெரிய காரியத்தைச் சாதிக்க வேண்டியிருந்தாள். அந்தக்காரியத்தை இன்றே செய்து முடித்து விடுவதென்று அவள் முடிவு செய்திருந்தாள். அதைப்பற்றித்தான் அவள் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். சாலையோரத்தில் உள்ள மரங்களிலிருந்து ஆந்தைகள் பயங்கரமாகக் கத்திக்கொண்டிருந்தன. இரவின் பயங்கர தோற்றத்தைக் கண்டு அவைகள் அஞ்சிக் கூக்குரலிட்டனவோ அல்லது இந்த அமைதியான இரவை மனிதர்கள் எவ்வளவு மோசமான செயலுக் கெல்லாம் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று பச்சாத்தாபப் பட்டு பதறியழுகின்றனவோ எனத்தோன்றின.

ஆனால் பார்வதியின் உள்ளத்தில் நடக்கும் போர் வெளி உலகக்காட்சி களினால் சிறிதும் பாதிக்கப்படவில்லை என்று தான் சொல்லவேண்டும்.

தன் ஆருயிர்க் காதலனுக்குத் தன் தந்தை செய்த தீங்கிற்கு ஏதாவது பிராயச்சித்தம் செய்துதான் ஆக வேண்டுமென்று ஆணையிட்டது இவள் மனச்சாட்சி. ஆனால் மனச்சாட்சியின் ஆணைக்கு கீழ்படிவதா யிருந்தால், முன்கோபமுள்ள அவளுடைய தந்தைக்கும் மூர்க்கத்தன மிகுந்த சமூகத்திற்கும் அவள் பதில் சொல்லியாக வேண்டும். ஆனால் அதற்காக அஞ்சி தன் முடிவை அதிலும் நியாயமான முடிவை கைவிட்டு விடுவதா! கூடவே கூடாது. குடம் நிறைய நீர் நிரம்பியிருந்தது. ஆனால் அவளுடைய உள்ளத்திலோ துயரம் தான் நிரம்பி யிருந்தது. பாவம் பார்வதி, அதிர்ஷ்ட மற்றவள் என்றுதான் சொல்லவேண்டும்.

உதையத்தூர் கிராமத்தில் அவர் தந்தை நல்ல செல்வந்தர். முத்து ரெட்டியார் என்றால் அந்த சுற்று வட்டார மனைத்திலும் அவரைத் தெரியாதவர்களே கிடையாது என்று துணிந்து கூறலாம் கள்ளுக்கடைகளைக் குத்தகைக்கு எடுத்து ஏராளமாகப் பணம் சம்பாதித்து விட்டார். அவருடைய ஏக புதல்விதான் பார்வதி இளமையிலே தாயை இழந்த பார்வதியைப் அவர் மிகவும் செல்லத்துடன் வளர்த்து வந்தார். பார்வதியை சிறந்த அழகி என்று சொல்லமுடியா விட்டாலும். ஒவ்வொரு மலரும் ஒவ்வொரு விதத்தில் அழகு என்பது போல் பார்வதியும் ஒருவிதத்தில் அழகி தான் என்று கூறலாம். இயற்கையிலேயே கிராமியப் பெண்களின் கட்டு மஸ்தான அங்க அமைப்புகள் பார்வதியிடமும் நிறைந்திருந்தன. அதுவே அவளுக்கொரு தனிக்கவர்ச்சி மனிதனைப் படைத்த இறைவன் மனித உள்ளத்திலே அன்பை உண்டாக்கி அந்த அன்பிலே காதலை ஜனிக்கச் செய்த அந்த மாயாஜாலக்காரன் நிச்சயம் கெட்டிக்காரனாய்த் தானிருக்க வேண்டும். பார்வதியின் அன்பு நிறைந்த உள்ளத்திலும் காதல் ஜனித்தது அவளுடைய காதலுக்கு இலக்கானவன் மேலத்தெரு முரு

கேசன். முருகேசனும் பார்வதியும் சிறுவயதிலேயே ஒன்ருய்ப் பழகியவர்கள். அவளுக்குக் கொஞ்சம் உறவுங்கூட. மாலை நேரங்களில் முருகேசன் வயலில் வேலை செய்துவிட்டு ஆற்றுக்குக் குளிக்கவருவதற்கும், பார்வதி இடுப்பில் குடத்துடன் தண்ணீர் எடுக்க வருவதற்கும். இரண்டுபேரும் பேசி வைத்துத்தான் வருகிருர்களோ என்று பார்ப்பவர்கள் ஐயப்படும் நிலையில் தானிருக்கும் அவர்கள் சந்திப்பு.

அவன் குளித்துவிட்டு கரையேறுவதற்குள். அவர் குடத்தை துலக்கிவிட்டு நீரைக் குடத்தில் நிரப்பிக்கொண்டு, கரைமேல் அவனுடைய வருகைகாக்காத்துக்கொண்டிருப்பாள். அவன் குளித்துவிட்டு கரையேறியதும், இரண்டுபேரும் சந்தோசமாகச் சிரித்துப் பேசிக்கொண்டு நடந்து செல்வார்கள். மனத்தை மயக்கும் அந்த மாலைவேளையிலே விதவிதமான வர்ணங்களை வானத்திரையிலே பூசிக் கொண்டிருக்கும் கதிரோனின் செப்பிடுவித்தைகளைக் கண்டு, மெய்மறந்து பரவசமடைந்து பாடிச்செல்லும் புள்ளினங்களைப் போல், அந்த இளங்காதலர்கள் இன்பப் போதையில் எதைப்பற்றி பேசி யிருப்பார்கள் என்பது வாசகர்களுக்குத் தெரியாததல்ல. முருகேசனும் பார்வதியும் ஒருவரை யொருவர் உள்ளன்புடன் நேசித்தார்கள். அவன் அவளைத் தவிர வேறுயாரையும் விவாகம் செய்து கொள்வதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்தான். அவளும் அவனைத்தவிர வேறு யாரையும் விவாகம் செய்து கொள்வதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்தாள்.

பார்வதியின் தந்தையிடத்தில் யாரோ ஒரு பெரியவர் பேச்சுவாக்கில், இவர்க ளிருவருக்கு முள்ள காதலைப்பற்றிச் சொல்லிவிட்டார்.

ஆனல் அதற்காக முத்து ரெட்டியார் கோபமோ வருத்தமோ அடையவில்லை. அதற்குப் பதில் சாந்தமாக. அதற்கென்ன, அவள் இஷ்டப்படி செய்து வைக்கவேண்டியது தானே. பிள்ளையாண்டானும் நம்மவன் தானே என்று சொல்லி விட்டார். அந்தப்பேச்சு எப்படியோ பார்வதியின் காதிலும் விழத்தான் செய்தது. தன்னுடைய காதலுக்கு எந்த விதமான ஆபத்தும் வராது என்ற எண்ணம் தன் தந்தை சொன்னவார்த்தைகளினல் வலுப்பட்டு விட்டது. அவள் உள்ளம் தன் ஆசைக்காதலன் தன்னருகில் வாழ்க்கைத் துணைவனுக என்றென்றும் இருப்பான் என்ற எண்ணத்தில் மேகத்தைக் கண்ட மயிலைப்போல் மகிழ்ச்சியடைந்தது.

அமைதியாக விருந்த அரசியல் வானில் திடீரென்று இடி முழக்கங்கள் கேட்கவாரம்பித்தன. நாடெங்கும் ஏழைமக்களின் உயிரை உறிஞ்சும் மதுவகைகளை ஒழித்து விடுவதற்காகக் கள்ளுக்கடைகளை மறியல் செய்தார்கள். உதையத் தூரிலும் முத்து ரெட்டியாரின் கள்ளுக்கடையிலும் மறியல் நடந்தது அரசியலைப்பற்றி அதிகம் தெரிந்து கொள்ளாமலிருந்தாலும் மக்களை படுகுழியில் வீழ்த்தும் மதுவரக்கனை ஒழிப்பதில் ஆர்வங்கொண்ட முருகேசனும் மறியலில் சேர்ந்து கொண்டான்.

மறியல் பத்து நாளாகத் தொடர்ந்து நடந்தது. கள்ளுக்கடைக்கு வருவோர் தொகை வெகுவாக குறைந்தது. தப்பித் தவறி வந்தவர்களும் தொண்டர்களின் வேண்டுகோளுக்கிணங்கி குடிக்காமலேயே திரும்பிப் போய் விட்டார்கள். முத்து ரெட்டியாரின் கோப மெல்லாம் முருகேசன் மீதே திரும்பியது. தனக்கு மிகவும் வேண்டியவன் அதிலும் கூடிய சிக்கிரம் தனக்கு மருமகனுகப் போகிறவன், அவன் இப்படி நடந்துகொள்

வதை அவரால் சகிக்கமுடிய வில்லை. எப்படியாவது அவனுக் கொரு பாடம் கற்பிக்க வேண்டுமென்று அவர் திட்டம் போட்டார். அவர் போட்ட திட்டப்படி மறுநாளிரவில் கள்ளுக்கடையை அவருடைய ஆட்களே நெருப்புவைத்துக் கொளுத்தினார்கள். எல்லாம் மிகவும் ரகசியமாகவே நடந்ததால் வெளி உலகத்திற்கு உண்மை தெரிய வழியில்லாமலிருந்தது. மறு நாள் காலை முத்து ரெட்டியார் முருகேசன் மீது போலிஸில் வழக்குத் தொடர்ந்தார். விரோதத்தின்மீது முருகேசன் தன் கள்ளுக்கடையை நள்ளிரவில் நெருப்புவைத்து கொளுத்தியதாகவும் அதைத்தடுக்கச்சென்ற தமது வேலையாட்களைக் கத்தியைக் காட்டி பயமுறுத்தியதாகவும், தமக்கு ஏற்பட்ட சொத்து நஷ்டத்திற்கும், அவமானத்திற்கும், முருகேசனே ஜவாப்தாரி என்று வழக்குத் தொடர்ந்தார். போலீசார் முருகேசனைக் கைது செய்துகொண்டு போனார்கள். வழக்கு மூன்றுமாதம் நடந்தது. சம்பவம் நடந்ததினம் முருகேசன் வெளியூர் போயிருந்தான் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயந்தான். ஆனால் சிலசாட்சிகள் முத்து ரெட்டியாரிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு, சாட்சிக் கூண்டிலேறி முருகேசன் கள்ளுக்கடைக்கு நெருப்பு வைத்ததைத் தாம் நேரிலேயே கண்டதாகக் கூறினார்கள். துரதிருஷ்டம் வாய்ந்த இந்த நாட்டிலே ஏகாதிபத்திய ஆசையில் ஆட்சிபுரியும் அன்னியர்களால் நிறுவப்பட்ட நீதி ஸ்தலங்களிலே அந்தஸ்திற்கும் அநியாயத்திற்குந்தான் முதலிடம் கொடுக்கப்படுகிறது. சாட்சிகளின் சத்தியவாக்கை நம்பியோ அல்லது முத்து ரெட்டியாரின் செல்வாக்கிற் கஞ்சியோ நீதிபதி கருணைகூர்ந்து இரண்டுவருடங்கள் கடுங்காவல் தண்டனையைத் தாராளமாக வழங்கினார் முருகேசனுக்கு. இந்தச் செய்தி பார்வதியின்காதில் விழுந்தபோது அவள் அப்படியே உணர்வற்றுக் கீழே விழுந்துவிட்டாள். அநியாயமாக தன் தந்தை தன்னுருயிர் காதலனைச் சிறைக்கனுப்பிவிட்டாரே என்று அளவிறந்த வருத்த முற்றாள். ஆனால் பணவெறி பிடித்த தன் தந்தையிடம் இதைச்சொல்வதினால் அவருக்குக் கோபம் அதிகமாக ஏற்படுமேயன்றி குறையாது இது அவளுக்குத் தெரியாததல்ல. அவளுடைய நிலையில் அவனுக்காக இறக்கப்படுவதைத் தவிர வேறு எதுவும் செய்ய சக்தியற்றிருந்தாள்.

எல்லையற்ற அகன்ற வானப்பரப்பிலே எக்களிப்போடு பறந்து செல்லும் பறவைகளைப் போல் சுதந்திரமாகத் திரிந்து கொண்டிருந்த முருகேசனுக்குச் சிறைவாழ்க்கை நரகமாகக் காட்சியளித்ததில் ஆச்சரியமில்லை. சிறைக்குச் சென்று ஒருவருடங் கழிந்த பின்பு அவனுக்கு பெரிய அம்மை போட்டது. சிறையதிகாரிகளும் வைத்தியர்களும் அவனைக் கைவிட்டு விட்டார்கள் அவன் உயிரோடு இருக்கும்போதே அவனை எமன்கையில் கொடுத்துவிட தயாரா யிருந்தார்கள். ஆனால் அந்தக் கொடிய நோய்க்குத் தன் கண்களிரண்டையும் பலி கொடுத்து விட்டு உயிரோடு தப்பிவிட்டான் முருகேசன். இரண்டு வருடங்களுக்குப் பிறகு குருடனான முருகேசன் நேற்றுத்தான் சிறையிலிருந்து விடுதலையாகி வந்திருந்தான் ஊருக்கு. அவனைத் தான் போய் பார்க்கவேண்டுமென்று பார்வதியின் உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது. தன் வாழ்க்கையையே பாழாக்கி விட்ட ஒருவருடைய மகளை இன்று முருகேசன் மணஞ் செய்து கொள்கிறேன் என்று சொல்வானா? சொல்லாவிட்டால் பார்வதியின் கதியென்ன. அவள் தான் அவனைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் செய்து கொள்வதில்லை என்று

உறுதியாக நிற்கிருளே? அவன் இன்று குருடனுகி விட்டான் என்பதற்காக பார்வதி இன்று தன் உறுதியை மாற்றிக் கொள்ளப்போவதில்லை. குடத்தை வீட்டில் கொண்டுபோய் வைத்துவிட்டு நேராக அவள் முருகேசன் வீட்டிற்கு விரைந்து சென்ருள் பார்வதி. முருகேசனின் வீட்டிற்குள் செல்லும் போது முருகேசனைத் தவிர வேறுயாரும் அப்போது வீட்டில் இல்லை நார்க்கட்டிலில் முருகேசன் படுத்திருந்தான். காலடியோசையைக் கேட்டதும் யாரது என்று குரல் கொடுத்தான். பார்வதி பேசாமல் அவன் பக்கத்தில் போய் நின்ருள். யாரது பேசாமல் நிற்கிறது. என்ருன் முருகேசன். ஏன் நான்தான் என்ருள் பார்வதி. ஒரு நிமிசத்துக்குள், பார்வதியின் குரலொலியை ஞாபகப்படுத்திக் கொண்ட முருகேசன் யாரு, பார்வதியா! என்ருன். ஆமாம், பார்வதி தான் என்று கூறிக்கொண்டு அவன் பக்கத்திலமர்ந்தாள். சிறிது நேரம் மௌனம் நிலவியது. பிறகு முருகேசனே பேச வாரம்பித்தான் வுங்கப்பாரு சௌக்கியந்தானே! பார்வதி.

இந்தக்கேள்வி அவளுடைய மென்மையான உள்ளத்தில் சுரீர் என்று தைத்தது. ஆனுலும் கோபத்தைக் காட்டிக்கொள்ளாமல், அப்பாரு சௌக்கியத்துக்கு என்ன குறைச்சல். உலகத்திலே எப்பவும் நல்லவங்க தானே கஷ்டப்படுவது. ஊம், அதைப்பற்றி பேசி யிப்போ என்ன ஆவப் போகுது.

நான் இப்போவுங்களை ஒண்ணு கேக்கப் போறேன். கேக்கட்டுமா? என்ருள் பார்வதி. ஊம் என்று தலையை அசைத்து தன்சம்மதத்தைத் தெரிவித்தான் முருகேசன். பார்வதிசொன்னுள் நம்ம இரண்டுபேரும் சத்தியம் செய்துக்கிட்டோமே அதைப்பற்றித்தான் உங்களைக்கேக்கப் போறேன். எங்கப்பாருசெய்த அநியாயத்துக்காக நீங்க என்னை மறந்து விடக்கூடாது. ஊரும்உலகமும் என்னசொன்னுலும் சரி. நான் உங்களைத் தான் கல்யாணம் செய்து கொள்வதென்றிருக்கிறேன். அதைத் தெரிவிக்கத்தான் வந்தேன் என்ருள். உணர்ச்சிவேகத்தில் அவள் அதைச் சொல்லி முடித்ததும் முருகேசன் சிரித்தான். அடஅசட்டுப்பெண்ணே! எங்காவது குருடனைப்போய் ஒருபெண் இப்படி வலியக்கல்யாணம் செய்துகொள்ளுகிறேன் என்று சொல்வதை நான் கேட்டதேயில்லை என்னைக் கல்யாணம் செய்து கொண்டால் வாழ்க்கையில் என்னசுகத்தை நீ அடையப் போகிருய் என்ருன். பார்வதி இதைக்கேட்டதும் அவளையறியாமலேயே சற்று உரத்தகுரலில் பேசினுள் இதெல்லாம் எதற்கு வீண் பேச்சு. நான் உங்களோடுதான் வாழ்க்கையை நடத்தப் போகிறேன் நீங்கள் சம்மதிக்காவிட்டால் நாளை "நம்பியான்கிணற்றில்" நான் மிதந்து கொண்டிருப்பேன். என்ன சொல்லுகிறீர்கள்? முருகேசன் அவள்முதுகை வருடிக்கொண்டே சொன்னுன் உணர்ச்சி நிறைந்தகுரலால். பார்வதி, உன்னுடைய உண்மையான காதலை நான்இன்றுதான் அறிந்து கொண்டேன். என் உள்ளத்தில் உன்னைத்தவிர வேறுயாருக்கும் இடமில்லை. என்றுசொல்லி அவளை அணைத்துக்கொண்டான். பார்வதி மகிழ்ச்சியோடு கட்டிலிலிருந்து இறங்கி அவன்பாதத்தை தொட்டுவணங்கினுள். அவளுடைய கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் அவனுடைய பாதத்தில் விழுந்து சிதறியது.

## 21-8-47-ல் தினசரி மடலில் வெளிவந்த மதிப்புரை

மும்மணி:— [மலர் 1. இதழ்கள் 1-2 வெளியிடுவோர் மும்மணி காரியாலயம் 4. பந்தர் தெரு, சென்னை 1. தனிப்பிரதி 3 அணா.]

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இம்மாதப் பத்திரிகையின் முதல் இரண்டு இதழ்கள் கிடைக்கப்பெற்ளும். ஜைனமதக் கோட்பாடுகளையும், அவைகளைக்கொண்டு எவ்விதம் நல்வாழ்க்கைநடத்த முடியும் என்பதையும் விளக்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு வெளிவருகிறது இந்தப் பத்திரிகை. தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் ஜைனர்கள் புரிந்த தொண்டைப்பற்றிய கட்டுரைகளை இதில் காண்கிறோம். அன்றி, ஜைன மதத்தைப்பற்றிய விளக்கக் குறிப்புகளும் உள்ளன. இந்தப் பத்திரிகை ஜைனர்களுக்கேயல்லாமல் தமிழ்ப்பற்று உடையவர்களுக்கும் உபயோகப்படக் கூடியவகையில் வெளிவருகிறது.

---

## —: காதல் :—

மான்வனி :: (இத்தாலியக் கவிஞர்)

உலகத்தில் காதலைப்பற்றி மனிதன் எழுதியிருக்கும் மிக அற்புதமான கதையையோ கவிதையையோ நான் பார்க்க நேர்ந்தால், அதை எழுதி வைத்துக் கொள்வதற்காகப் பேனாவையும் கடுதாசியையும் தேடவேனென்று நான் கருதவில்லை. அவ்வாறு நான் தேட நேர்ந்தால் அதற்குப் பின்பு நான் மிகவும் வருந்துவேன். இதரருக்குக் காமவெறியூட்டும் முறையில் காதலைப் பற்றிப் பேசவோ, எழுதவோ கூடாது. உலகத்தில் காதல் அவசியம் என்பதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால் அந்தக் காதல் விஷயம் ஏற்கனவே மலிந்து கிடக்கிறது. எனவே நாம் அதை மற்றவர்களுக்குக் கற்றுக் கொக்க வேண்டியதில்லை உலகத்துக் தேவையான வேறு பலவகை உணர்ச்சிகளும், 'பாவ'ங்களும் இல்லையா? அத்தகைய உணர்ச்சிகளைப்பற்றி எழுதலாமே! இரக்கம், அன்பு சுயநலத் தியாகம் முதலிய லட்சியங்களைக் கையாளலாமே. மனிதசமூகத்துக்கு இது மகத்தான பயனளிக்குமே?

(மங்கையில் வெளிவந்தது)

---

18-ஆம் பக்கம் தொடர்ச்சி

கிடக்கின்றதை, இவன் "எழுதிக்கொண்ட கடிதம்" என்று வேறு ஏன் எழுதிக் கூறவேண்டும்? அவன் தகப்பனர் அவ்வளவு அறிவில்லாதவரா? அக்கடிதத்தைக் கல்லென்றே மரமென்றே மயங்கி எண்ணி விடுவாரோ? என்ற சந்தேகம் சர்வசாதாரணமாய்த் தோன்றுகின்றது பாருங்கள்!

நான்காவதாக "என்ன வேன்றல்" என்று வேறு எழுதி இழவெடுத்து வைத்திருக்கிறான். என்ன வென்று கேளாவிட்டால்? இவன் எழுதமாட்டானே? அப்படியானல் என்னவென்று கேட்காத முன்னமே இப்பொழுது ஏன் எழுதித் தொலைத்தான் பைத்தியக்காரன்? என்ற கேள்விகளைக் கேட்காமல் இருக்க முடியவில்லை.

(தொடரும்)

# கறிவேப்பிலை

'டாக்டர்'

நம்மவரிடையே சாதாரணமாக வழங்கும் ஒரு பழமொழி உண்டு. பருப் பில்லாமல் கல்யாணம் உண்டா? என்று. இதே மாதிரி கறிவேப்பிலை இல்லாமல் சமையல் உண்டா? என்று புதுமொழி உண்டாக்கிக் கொள்ளலாம். என் என்றால் கறிவேப்பிலை சமையல் பாதார்த்தங்களில் மிகவும் முக்கியமான தொரு அங்கமாக இருக்கிற தல்லவா?

நம் நாட்டிலே தயாரிக்கப்படும் விதவிதமான உணவு பதார்த்தங்கள் ருசிக்குப் பேர் போனவை. ருசியான பதார்த்தங்களைத் தயாரிப்பதற்காகப் பல் வேறு உபகரணங்களை நம்மவர் நாடுகிறார்கள் இப்படிப்பட்ட உபகரணங்களுள் முக்கியமானது கறிவேப்பிலை. அதற்கென்று தனியாக வுள்ள மணமும், ருசியும் கூடி சமையலுக்கு அவசியமானதாகி விட்டது.

இந்த நாட்டிலே ஏராளமாய்ப் பயிராகும் பெருஞ் செடிகளினத்தைச் சேர்ந்தது கறிவேப்பிலை. காடுகளிலும், மலைகளிலும், வீட்டுத் தோட்டங்களிலும் பயிராகும். நீர்மோர், ரசம், குழம்பு, முதலிய திரவப் பதார்த்தங்களில் இதைத் தாளிதமாக உபயோகிக்கலாம். கறிவேப்பிலைத் துவையல் சிறந்த ஊறுகாய்களையும் தோற்கடிக்கும்.

கறிவேப்பிலைச் செடியின் எல்லா உறுப்புகளும் அதாவது இலை ஈர்க்கு, பட்டை, வேர் முதலிய யாவும் பயன் படக்கூடியவை. கறிவேப்பிலைக் கஷாயம் பித்தத்தைக் கண்டிக்கும்.

இலையை நிழலில் உலர்த்தி, மிளகு, உப்பு, சீரகம், சுக்கு, முதலியவற்றைச் சேர்த்துப் பொடியாக்கிச் சோற்றுடன் கலந்து சாப்பிட்டால் மந்தம், மந்தபேதி, மலக்கட்டு, பிரமேகம் முதலியவை சாந்தமாகும்.

இலையுடன் சுட்டபுளி, வறுத்த உப்பு, வறுத்த மிளகாய் கூட்டித் துவையல் செய்து ஆகாரத்துடன் சாப்பிட்டால் அரோசகம் பித்த வாந்தி, பித்தக்ஷயம், அஜீரணம், வயிற்றுளைச்சல் இவைகள் குணமாகும். ஈர்க்கின் புறணியைத் தாய்ப் பால் விட்டு இடித்து ரஸம் பிழிந்து கிராம்பு, திப்பிலி சேர்த்து இரண்டு மூன்று தரம் குழந்தைகளுக்குப் புகட்ட வாந்தி நிற்கும். பசியை உண்டாக்கும்.

இலையை அரிசியுடன் சேர்த்து உரலில் இட்டுக் குத்தித்தேய்த்துப் புடைத்துவிட்டு, அத்துடன் ஒரு பழுத்து உலர்ந்த மிளகாயைக் கூட்டிக் கருக்கிச் சாந்து நிறம் வரும் பக்குவத்தில் வசம்புச் சாம்பல், சிறு நாகப்பூ, அதிவிடயம் இவைகளைச் சேர்த்து நீர்விட்டுச் சுண்டக் காய்ச்சிக் கொடுக்க அஜீரண பேதி முதலியன நீங்கும்.

இதன் ஈர்க்குடன் வேப்பீர்க்கு, நெல்லி ஈர்க்குச் சேர்த்து இடித்து நீர்விட்டுக் காய்ச்சிக் கொடுக்க வாந்தி நிற்கும்.

மேற்படி இலையில் கொஞ்சமும் வயதுக்குத் தக்கபடி 1 முதல் 3 மிளகையும் சேர்த்து நெய்யில் வறுத்து, வெந்நீர் விட்டு அரைத்துக் கரைத்துப் பாலர்களுக்கு நீராட்டிய பின் குடிப்பிக்க மந்தம் முதலியன நீங்கிப் பசியை உண்டு பண்ணும்.

(மங்கையில் வெளிவந்தது.)

## பஞ்சாப் நைஜாம் ஸ்டேட்களில் ஹிந்து முஸ்லிம் கலகத்தில் ஜைன சமாஜத்திற்கு ஏற்பட்ட இடையூறுகள்.

லாகூரில் நடந்த கலவரத்தில் ஜைன சமாஜத்திற்கு எண்ணிறந்த இடையூறுகள் நேரிட்டன. ஜைன கோயிலுக்குள் நுழைந்து வெள்ளி, பொன் முதலிய சாமான்களைக் கொள்ளை யடித்தனர். ஜைன பிம்பங்களை உடைத்து சின்ன பின்னமாகச் செய்தனர். கோயில்களையும் உடைத்துத் தள்ளினர். அங்கிருந்த ஜைனர்கள் சிலர் வெளியேறினர். சிலர் பாகிஸ்தானத்திற்குட்பட்டனர். நைஜாம் ஸ்டேட்டிலும் சில கிராமங்களில் இவ்வித இடையூறுகள் நேரிட்டன வென்றும் ஹிந்தி பத்திரிகை மூலமாகத் தெரிகின்றன.

இடையூறுகள் பல ஜைன சமாஜத்திற்கு முன்னர் ஏற்பட்டிருந்தன வென்று கேள்விப்பட்டிருந்தோம். ஆயினும் அவை நடந்தனவோ அல்லனவோ என்று சந்தேகித்தோம். தற்போது நடக்கும் விபத்தைக் கேட்டு மனம் வருந்த மடைகின்றது. இதை நோக்குங்கால் முன்னரும் இப்பெற்றிய தீயசெயல்கள் நடந்திருக்கும் என உறுதியாகின்றன. இந்த இடையூறுகள் எல்லாம் நம் நாடு பிளவுபட்டதன் காரணமாக விளைகின்றன. நம் நாட்டுத் தலைவர்கள் இப்பெற்றிய இடையூறுகளை விரைவில் நீக்குதற்குரிய ஏற்பாடுகள் செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

ஜைன்

---

# அநுபூர்வி

**அநுபூர்வி** என்னும் இந்நூல் ஜைன முனிவர்களால் இயற்றப்பட்டது. ஜைனர்கள் பஞ்சநமஸ்காரமந்த்ரத்தை ஜெபம் செய்தற்கு அநுகூலமானது. ஸ்ரீமான் A. சக்ரவர்த்தி B. A. மெஜிஸ்ட்ரேட் வேதாரண்யம் அவர்கள் தன் முயற்சியினால் வெளிவந்தது. இதனை வெளியிடுதற்கு பொருளுதவி செய்தவர்கள் ஷேட் ஸேன்மல்ஜீ ஜைன் அவர்கள். இப்புத்தகத்தை நன்றாகப் படித்து, தினந்தோறும் ஜெபம் செய்து எல்லோரும் பயன் படுத்திக் கொள்க.


ரிஜிஸ்டர் நே.

**1948-ஆம் வருஷத்திய காலண்டர்கள் தயாராகின்றன.**

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 DEC 1947
MADRAS

## மஹாத்மா

### பாக்கெட் காலண்டர்



**✻ 1948 ✻**

மஹாவீர் அண்டு கம்பெனி,

4, பந்தர் தெரு, :: மதராஸ் 1.

இக் காலண்டருள் இராகு காலம், குளிகை காலம், அமாவாசை, பௌர்ணமி, சஷ்டி, அஷ்டமி, சதுர்த்தசி, முதலிய விரதநாட்களையும், விடுமுறை நாட்களையும் பார்ப்பதற்கு எப்பொழுதும் பாக்கெட்டில் வைத்துக் கொள்ள அனுகூலமாகும். ஆதலின் அனைவரும் இதனை வாங்கிப் பயன் படுத்திக் கொள்க. மஹாவீர் ஆபீஸ் காலண்டர், மஹாவீர் பாக்கெட் காலண்டர், மஹாத்மா ஆபீஸ் காலண்டர் முதலியவைகளும் கிடைக்கும்.

பாக்கெட் காலண்டர் **0 1 0** ஆபீஸ்காலண்டர் **0 12 0**

வியாபாரிகட்கு 25 0 0 சதவிகிதம் கமிஷன் கொடுக்கப்படும்.

விவரமறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதி தெரிந்து கொள்ளவும்.

மேனேஜர்

**மஹாவீர் அண்டு கம்பெனி,**

4, பந்தர் தெரு, :: மதராஸ் 1.

Edited, Printed & Published by Sreepala Varni at the Mahavir Press, 54, Lingi Chetty St, Madras.